# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/18 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/18 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி 1: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(70)/76.

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1976, திசெம்பர் 17.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், அவசரகால (தேவைக்கெடுக்கப்பட்ட ஆதனத்துக்கான அல்லது பொறுப்பு முயற்சிகளுக்கான நட்டஈடு கொடுத்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வருமுன்னர் அல்லது வந்த பின்னர் எந்நேரத்திலேனும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியைப் பின்பற்றி அல்லது பின்பற்றுவதாகக் கருதி ஏதேனும் ஆதனம் அல்லது பொறுப்பு முயற்சி தேவைக்கெடுக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது தேவைக்கெடுக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய தேவைக்கெடுத்தலினால் பாதிக்கப்படும் எவரேனுமாள், கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் அமைச்சர் விதிக்கக்கூடிய வாறான அத்தகைய காலத்தினுள் அவர்து நட்டஈட்டுக் கோரிக்கையை எடுத்துக் காட்டுகின்ற எழுத்திலான விண்ணப்பமொன்றை அமைச்சருக்குச் செய்யலாம்.

3. கொடுபடற்குரியதான நட்டஈட்டைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, அமைச்சரானவர், அவசியமானவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா விசாரணைகளையும் செய்யலாம் அல்லது செய்விக்கலாம்.

4. அமைச்சரானவர் நட்டஈட்டைத் தீர்மானிப்பதற்குச் சிக்கலானதென, அல்லது கஷ்டமானதென அல்லது அவசியமானதென அவருக்குத் தோன்றுகின்றதான ஏதேனும் கருமத்தை, அவரினால் நியமிக்கப்பட்டதும், மூன்றுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுமான சபையொன்றுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

5. சபையின் தவிசாளராகவிருப்பதற்கென, அமைச்சர் சபையுறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

6. சபையானது, அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்துக்கெடுக்கும் நோக்கத்துகாக, சபையானது அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா விசாரணைகளையும் செய்வதற்கும் அத்தகைய எல்லாச் சான்றையும் கேட்பதற்கும் தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.

7. சபையானது, அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்துக்கெடுத்தபின்னர், அதன் அபிப்பிராயத்தை அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. நட்டஈட்டுக்கான கோரிக்கையெதற்கும் போதிய சான்றுள்ளதென அமைச்சர் திருப்திப்படுமிடத்து, பொதுமக்கள் பாதுகாப்புக்கும் பொது அமைதியைப் பேணுவதற்கும், படைக்கலத்தை, கலவரத்தை அல்லது உள்நாட்டுக் கிளர்ச்சியை அடக்குவதற்கும், அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணிவருவதற்குமாக, அவசியமானவையென அல்லது உகந்தவையென அவருக்குத் தோற்றுகின்றவாறான அத்தகைய கருத்துக்களுக்கமைய, எத்தேவைக்கெடுத்தல் தொடர்பில் நட்டஈடு கோரப்படுகின்றதோ அத்தேவைக்கெடுத்தல் காரணமாகக் கோரிக்கையாளருக்கு ஏற்பட்ட நட்டத்தை அல்லது சேதத்தை இயலுமானவரையில் சரிசெய்தல் வேண்டும்.

ஆயின், மேலும், ஏதேனும் சட்டத்தில், வழமையில் அல்லது வழக்காறில் அல்லது கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழான கூட்டுடன்படிக்கையில் முரணாக எது எவ்விதமிருப்பினும், தகுதிவாய்ந்த அதிகாரியின் பணிப்பினைப் பின்பற்றி திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை புரியப்படும் அத்தகைய மேலதிக வேலை மணித்தியாலங்கள் தொடர்பில், மேலதிகநேர வேலைக்கான கொடுப்பனவு என்ற தன்மையிலான ஏதேனும் பணக்கொடுப்பனவைப் பெறுவதற்கு அத்தகைய வேலையாள் எவரும் உரித்துடையவராதலாகாது.

5. நான்காம் ஒழுங்குவிதியின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரி வேறுவகையாகப் பணித்தாலன்றி, இவ்வொழுங்கு விதிகள் ஏற்புடையனவாகும் எல்லா நிறுவனங்களிலும் எல்லா வேலையாட்களும் 1974, சனவரி 12 ஆம் தேதிக்கு முன்னர் அவர்கள் எந்நேரத்தில் வேலையை ஆரம்பித்தார்களோ அந்நேரத்தில் வேலையை ஆரம்பித்தல் வேண்டும் என்பதுடன், 1974 சனவரி 12 ஆம் தேதிக்கு முன்னர் அவர்கள் வேலை செய்துவந்த மணித்தியாலங்களுடன் சேர்த்து மேலதிகமாக, திங்கட்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை வரையிலான நாட்களில் ஒவ்வொரு நாளும் நாள் முடிவில் நாற்பத்தைந்து நிமிடங்கள் கூடுதலாக வேலை செய்தலும் வேண்டும்.

6. (1) வேலையாள் ஒவ்வொருவரும், இவ்வொழுங்குவிதிகளையும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் விடுக்கப்படும் எவையேனும் பணிப்புகளையும் பின்பற்றி வேலை புரிவதற்கு 1974, சனவரி 12 ஆம் தேதிக்கு முன்னர் அவர் பெறுவதற்கு உரித்துடையவராயிருந்திருக்கக்கூடிய ஒவ்வொரு வாரத்துக்குமான அதே ஊதியத்தைப் பெறுதல் வேண்டும்.

(2) நான்காம் ஒழுங்குவிதி ஏற்புடையதாகின்ற வேலையாள் ஒருவர், அத்தகைய ஒழுங்குவிதி இருப்பினும்கூட, சனிக்கிழமையினும் வேலை செய்யும்படி தேவைப்படுத்தப்பட்டிருந்து அவ்வாறே வேலை செய்கின்றவிடத்து, அவர் அத்தகைய வேலை தொடர்பில் மேலதிக வேலைக்கான கொடுப்பனவு என்ற தன்மையில் பணத்தொகை ஒன்றைப் பெற உரித்துடையராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகை அவருக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திநான்காம் ஆண்டு சனவரி 12 ஆம் தேதிக்கு உடனடியாக முன்னர் ஏதேனும் தொழிலில், அல்லது அலுவலகத்தில் எவரேனும் தொழில்தருநரினால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒவ்வொருவரும், வேறு எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய, 1974, சனவரி 12 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய வேலையாள் துய்த்திருந்தவற்றிலும் பார்க்கக் குறைந்த அனுகூலம் உடையனவாகவிராதனவும் (எத்தகையதுமான பெயரைக் கொண்டு அழைக்கப்படுவதான அல்லது அழைக்கப்படுவனவான) வேதனம், படிகள், வேறெவையேனும் பணவகையான கொடுப்பனவுகள் என்பன தொடர்பிலானவுமான அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மேல் அவ்வாறு தொடர்ந்தும் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

7. ஏதேனும் தொழிலிலுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், சம்பளச் சபைக் கட்டளைச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் சம்பளச் சபையின் முடிவெதனதும் ஏற்பாடுகளின்படி ஒவ்வொரு வேலையாளுக்கும் ஆண்டு விடுமுறை நாட்கள் வழங்குவதற்காக வேலை புரிந்த நாட்களின் எண்ணிக்கையைக் கணிக்கும் நோக்கத்துக்காக, ஒவ்வொரு வாரத்திலுமுள்ள சனிக்கிழமை ஒவ்வொன்றையும், அவரின் கீழ்த் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அத்தகைய வேலையாள் அந்நாளன்று வேலை புரிந்துள்ளார் என்றாற் போன்று, கணக்குக்கெடுத்தல் வேண்டும்.

8. ஒழுங்குவிதி 6 (3) என்பதில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிர, வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், இவ்வொழுங்கு விதிகள் பயனுடையனவாதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளில்—

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது—

(அ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனம் தொடர்பில், அத்தகைய அரசாங்கத் திணைக்களத்துக்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளர் என ;

(ஆ) ஏதேனும் உள்ளூரதிகாரசபை தொடர்பில், அரசாங்கநிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் என ;

(இ) ஏதேனும் தனியார்துறைத் தாபனம் தொடர்பில், தொழில் ஆணையாளர் என, அல்லது எவரேனும் பிரதி அல்லது உதவித் தொழில் ஆணையாளர் என,

பொருளாகும் ;

"தனியார்துறைத் தாபனம்" என்பது ஏதேனும் அலுவலகத்தை உள்ளடக்கும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, அல்லது கிராமச்சபை எனப் பொருளாகும் ;

"கூட்டுத்தாபனம்" என்பது அதன் மூலதனம் முழுமையாகவோ பகுதியளவிலோ அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு எனப் பொருளாகும் ;

"கடை", "அலுவலகம்" என்பன முறையே (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர்கள் (தொழில், ஊதியம் ஒழுங்குபடுத்தல்) சட்டத்திலுள்ள அதே கருத்துக்களையுடையனவாதல் வேண்டும்; ஆனால், தகுதிவாய்ந்த அதிகாரி இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கக்கூடிய வேறேதேனும் அலுவலகத்தை உள்ளடக்குதலாகாது ;

"ஆணையாளர்", "வேலையாள்", "தொழில்தருநர்" என்பன முறையே சம்பளச் சபைக் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே கருத்துக்களையுடையனவாதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது